இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**“என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப்பின் தொடர்கின்றன. நான் அவற்றிற்கு நிலைவாழ்வை அளிக்கிறேன். அவை என்றுமே அழியா. அவற்றை எனது கையிலிருந்து யாரும் பறித்துக் கொள்ள மாட்டார்.”**

**(யோவான்: 10:27-28)**

# இறைவனின் இரக்கம் அனைவருக்கும் உரியது

வத்திக்கான்- இறைவனின் இரக்கம் அனைவருக்கானது, இதற்கு இயேசு கிறிஸ்துவே ஆதாரம் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். இப்புவியில் வாழும் காலத்தில் இறைவனின் இரக்கம் மனிதரின் பார்வைக்கு வெளிப்பட பற்பல செயற்கரிய செயல்களை இயேசு செய்தார். நற்செய்தி அறிவித்தது, நோயாளிகளைக் கணப்படுத்தியது. பாவிகளை அண்டிச் சென்றது, மன்னிப்பு வழங்கியது போன்ற செயல்கள் வழி இறைவனின் இரக்கத்தை எடுத்தியம்பினார் என்று கூறிய திருத்தந்தை, இறைவனின் அன்பும் இரக்கமும் அனைவருக்கும் உரியது என்பதை வலியுறுத்தினார்.

புனித பேதுரு சதுக்கத்தில் உரையாற்றிய அவர், எவ்வாறு இறைவன் வாக்களித்த இரக்கத்தை இயேசு நிறைவேற்றினார் என்பதையும் எடுத்துரைத்தார். சிலுவையில் தொங்கிய வேளையில், எவரும் இறைவனின் இரக்கத்திலிருந்து விலக்கப்படவில்லை. “தந்தையே இவர்களை மன்னியும் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்” என்று மன்றாடிய இயேசு அனைவரும் பாவ மன்னிப்புப் பெற வேண்டினார். ஒப்புரவு எனும் அருள்சாதனத்தின் வழி அவரது மன்னிப்பு தொடர்கிறது. இறைவனின் இரக்கம் பெருகுகிறது என்பது திருத்தந்தையின் வெளிப்பாடாக இருந்தது.

இயேசு வெறுப்பையோ பகைமையையோ கொணரவில்லை. மாறாக, அன்பை விதைத்தார். நாம் அனைவரும் பாவிகளாக இருந்தாலும், நாம் மன்னிப்புப் பெறுகிறோம். இறைவனின் இரக்கம் நம்மில் உருமாற்றம் கொணர்கிறது. எனவே, ஒவ்வொரு கத்தோலிக்கரும் தயக்கம் கொள்ளாமல், ஒப்புரவு அருள் அடையாளத்தின் வாயிலாக இறைவனின் இரக்கத்தை அனுபவித்து வாழ அழைக்கப்படுகிறார்கள் என்று மேலும் அறிவுறுத்தினார்.

இயேசு நம்மை தனிமைப்படுத்திக் கொள்ளவில்லை. அனைத்து மக்களோடும் இணைந்தார். குறிப்பாக பாவிகளை வரவேற்று உபசரிப்பதற்கு அவர் தயங்கவில்லை. பிறரைப்போல திருமுழுக்குப் பெறவும் அவர் பின்வாங்கவில்லை. அவரது பணி முதன்மையானதாக இருந்தது. தமது பணியில் வாயிலாக இறைவனின் இரக்கம் இவ்வுலகிற்கு வெளிப்பட அல்லும் பகலும் உழைத்தார். இன்று அவரது உழைப்பு வீணாகக்கூடாது. “இறைவனின் இரக்கம் அனைவருக்கும் உரியது என்பது கத்தோலிக்கர்களின் வாயிலாக தொடர்ந்து வெளிப்பட வேண்டும். அன்பும் இரக்கமும் வெளிப்படாத கத்தோலிக்கர் வாழ்வு, சாட்சிய வாழ்வாகாது. எங்கும் எப்பொழுதும் இறைவனின் இரக்கத்துக்குரிய மக்களாகவும் அதே இரக்கத்தை வெளிப்படுத்தும் மக்களாகவும் கத்தோலிக்கர் வாழ விரும்பாவிட்டால், வாழ முற்படாவிட்டால், நற்கருணையை ஏற்பதில் பலன் ஏதுமில்லை என்பதைத் திருத்தந்தை நினைவூட்டினார்.

இயேசு கிறிஸ்துவைத் தேடும் மக்கள் அவர் வெளிப்படுத்திய இறைவனின் இரக்கத்தை அனைவரோடும் பாரபட்சமின்றி பகிரும் சீடர்களாக முதலில் உருமாற வேண்டும் என்பது நிபந்தனையாக உள்ளது. அனைவருக்குமான இறைவனின் இரக்கம் அனைவரையும் சென்றடைய கருவிகளாக அழைக்கப்பட்டுள்ள கத்தோலிக்கர் இதை உணர்வார்களாக என்பதும் திருத்தந்தையின் ஏக்கமாக உள்ளது.

## நல்லாயன் பங்கு மக்கள் பாஸ்காவை நோக்கி பயணம்...



**ஸ்தாப்பாக்-** கடந்த வாரம் நல்லாயன் பங்கு மக்களின் 3 நாள் ஆன்மிக பயிற்சி புனித தோமையார் குவாந்தான் பங்கில் நடைபெற்றது. அனைவரும் காலையிலேயே ஒன்றுகூடி பஸ்சில் பயணத்தை மேற்கொண்டார். நிகழ்வின் ஆரம்ப கட்டமாக ஆரம்ப செபத்தோடும் பாடல்களுடனும் பின்பு ஒருவரை ஒருவர் அறிமுக படுத்தி கொள்வதற்கான விளையாட்டோடு ஆரம்பிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை மற்றும் உயிர்ப்பை கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டன.

விவிலயத்தில் உள்ள நற்செய்தியாளர்களின் மாதிரிகளை பின்பற்றி நம்மை யார் என்று தெரிந்து கொள்ள முடிந்தது. ஒவ்வொரு குழுக்களும் தங்கள் திறமைகளை வெளிபடுத்தி அருமையாக பங்கேற்றார்கள். பயிற்சியின் முடிவில் அதன் கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் பகிர்ந்து கொண்டார்கள். இறைவார்த்தை படிப்பதனால் நம் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் மேலும் வலுப்பபடுத்த உதவுகிறது. நம் வாழ்க்கைக்கு வழிகாட்டி என்பதை மறந்து விட கூடாது என்பதும் நினைவுறுத்தப்பட்டது.

இப்பயிற்சியின் மூலம் நிறைய காரியங்களை கற்றுக்கொண்டனர். கடவுள் தேர்ந்தெடுத்த ஒவ்வொரு இறைவாக்கினர்களின் தன்மைகளையும் மற்றும் இவர்கள் வழியாக கடவுள் நிறைவேற்றிய பணிகளையும், வாக்குறுதிகளையும் மேலும் தெரிந்து கொண்டனர். நமக்கும் பணி செய்ய கடவுளின் அழைப்பு உள்ளது என்பதையும் அறிந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சியின் இறுதியில் மேலும் இயேசு கிறிஸ்துவை ஒட்டிய படக்காட்சிகள் போடப்பட்டது. பிறகு ஞாயிறு பஸ் மெந்தாகப்பை நோக்கி பயணம் தொடர்ந்தது. இரக்க ஆண்டின் சின்னமான இந்த புனித சகாயமாதா தேவாலய இரக்க கதவு திறக்கப்பட்டிருந்தது. அருள்தந்தை கிறிஸ்தோப்பர் மற்றும் நல்லாயன் பங்கு மக்கள் அங்கே செபவழிபாடு முடிந்தவுடன் பஸ் கோலாலம்பூரை நோக்கி புறப்பட்டது.

நமக்காக உயிரை தியாகம் செய்த இயேசுவை போல் நாம் நம் உயிரை கொடுக்க அவசியமில்லை. ஆனால், அவரை போல் வாழ நாம் முயற்சி செய்ய வேண்டும் என்ற நினைவோடு அனைவரும் வீடு திரும்பினர். **- லோரா ஜோசப்**

## 'இறைமகன் காவியம்' நூல் வெளியீடு

ரெங்கம் பட்டணத்தில் குன்றின்மேல் வீற்றிருக்கும் பாத்திமா மாதா தேவாலய வளாக சீரமைப்பு பணிக்காக மலாக்கா கவிஞர் திரு.ஜோசப் செல்வம் எழுதிய 'இறைமகன் காவியம்' இரண்டாம் முறையாக நூல் வெளியீடு கண்டது. முதல் வெளியீடு மலாக்கா, புனித பிரான்சிஸ் சேவியர் தேவாலயத்தில் 1997 ஆம் ஆண்டில் சவரியார் சபையினரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இன்று (2-4-2016) நடைபெற்ற வெளியீட்டிற்கு மலாக்கா போல்ராஜ் குப்பு அவர்கள் தலைமையில் அருள்தந்தை ம.தேவதாசன் அவர்களின் மேற்பார்வையில் வெளியீடு கண்டது. சிறப்பு வருகையாளராக தலைநகர் டத்தோ அந்தோணி வனத்தையா, ரெங்கம் நாடளுமன்ற உறுப்பினர் டத்தோ லியோங் தெக் மெங், டத்தோ எம்.எம் சாமி, சுற்றுவட்டார அரசியல் தலைவர்கள், மற்றும் குறிப்பாக பாமோல் புனித அன்னம்மாள் சிற்றாலம், பாலோ புனித தத்தேயு சிற்றாலயம், குளுவாங் புனித பிரகாசியார் ஆலயம் சார்ந்த விசுவாசிகள் என சுமார் 80 பேர் கலந்து கொண்டு தங்களால் இயன்ற கனிசமான நன்கொடைகள் வழ.ங்கி ஆதரவு தந்தனர்.

இதுதான் முதல் தடவையாக நூல் வெளியீடு செய்து, இதன் மூலம் ஆலய வளாக சீரமைப்பு பணிக்கு நிதி திரட்டப்பட்டது. கிறிஸ்தவர்கள் மட்டும் அல்லாது சகோதர மதத்தினரும் கலந்து கொண்டு ஆதரவு தந்தது இந்நிகழ்வுக்கு மெருகூட்டியது என்றால் மிகையாகாது. கோலாட்டம், தமிழ் வாழ்த்து, துவக்க செபம், சிறப்புரை, நூல் ஆய்வு, என ஒன்றரைமணி நேரத்துக்குள் கூட்ட நிகழ்வை சிறப்பாக வழிநடத்திச் சென்றார் செல்வி கண்மணி.

**- ஆ.வி.டேவிட்**

